Previous Date of examination : 07/06/2022

நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,

திருவாரூர்

**CC No. 63/2018**

**PW 1 –** கார்த்தி, த/பெ. வீரபாண்டியன்

தேதி - 22.09.2022

**சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டார். மனுவின்பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு, 3 வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை -**

**(1)** 2015ம் வருடமே மாவட்ட குற்றப்பிரிவு அலுவலகத்தில் புகார் கொடுத்தேன் என்றால் சரிதான். மாவட்ட குற்றப்பிரிவில் மனு கொடுத்து நடவடிக்கை எடுக்காததால் திருவாரூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பாக ஆர்பாட்டம் செய்தோமா என்றால் ஆர்பாட்டம் செய்தார்கள் நான் அப்போது இல்லை. நானும், அந்த ஆர்பாட்டத்தில் இருந்தேன் என்றால் சரியல்ல. மாவட்ட ஆட்சியரிடம் மனு கொடுத்தபோது நான் அங்கு இல்லை. ஆர்பாட்டத்திற்கு பிறகு சுமார் மூன்று மாதம் கழித்து மாவட்ட குற்றப்பிரிவில் காவல் ஆய்வாளர் முன்பு ஆஜர் ஆனோம் என்றால் சரிதான். புகார் எழுதி என்னிடம் கையெழுத்து வாங்கினார்கள் என்றால் சரிதான்.அதில் என்ன எழுதியிருந்தது என்று தெரியாது என்றால் சரியல்ல.

**(2)** பணம் கொடுத்தது சம்பந்தமாக எழுதியிருந்தது. புகாரை நான்தான் எழுதினேன். கைப்பட எழுதி கொடுத்தேன் என்றால் சரிதான். புகாரை மற்றவர்களும்எழுதி கொடுத்தார்கள். புகார் கொடுத்தபோது எதிரி முருகானந்தமும் வந்திருந்தார் என்றால் சரிதான். அன்று எல்லாரையும் விசாரணை செய்து முடிக்கும்போது மாலை நேரமாகிவிட்டது என்றால் சரிதான். முருகானந்தத்தை அங்கு வைத்துக்கொண்டு எங்களை அனுப்பி விட்டார்கள் என்றால் சரியாக ஞாபகம்இல்லை. முருகானந்தம் எங்களை போன்று புகார் கொடுக்க வந்த நபர் என்றால் தெரியாது. அவரும் பாதிக்கப்பட்டுள்ளார் என்றால் அது எனக்கு தெரியாது. முருகானந்தம் எங்களை போலவே செந்தில்நாதனால் பாதிக்கப்பட்ட நபர் என்றும்அந்த விபரம் எனக்கு தெரியும்என்றால் சரியல்ல.

(3) இருவரும்தான்பணம்வாங்க வருவார்கள். முருகானந்தம் செந்தில்நாதனின் மச்சான் என சொன்னார். 01.03.2016 ம் தேதி புகார் கொடுக்க வந்தோமா என்றால் தேதி சரியாக ஞாபகம்இல்லை. வருடம் 2016 ஆகும். 1 வது எதிரியை நாங்கள் கண்டுபிடிக்க முடியாததால் அவருடைய உறவினரான அப்பாவி முருகானந்தத்தையும் சேர்த்து புகார் கொடுத்தால்தான் 1 வது எதிரியை பிடிக்க முடியும் என்றும், பணத்தை வாங்க முடியும் என்றும் அதனால் 3 வது எதிரிக்கு எதிராக பொய் புகார் கொடுத்துள்ளோம் என்றால் சரியல்ல. நான்சொல்வதுபோல முருகானந்தத்திற்கும் எங்களுக்கும்எவ்வித சம்பந்தமும்இல்லை என்றும்,எங்களை போல் முருகானந்தமும் பாதிக்கப்பட்ட நபர் என்றால் சரியல்ல. 3 வது எதிரியை சேர்த்து பொய் புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. போலிசார் புகார் கொடுத்த பின்னர் என்னை விசாரிக்கவில்லை என்றால் சரிதான்.

**மறுவிசாரணை இல்லை.**

Previous Date of examination : 07/06/2022

நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,

திருவாரூர்

**CC No. 63/2018**

**PW 2 –** உதயகுமார், த/பெ.பன்னீர்செல்வம்

தேதி - 22.09.2022

**சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டார். மனுவின்பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு, 3 வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை -**

(1) கார்த்தி புகார் கொடுத்தபோது நான் வந்தேனா என்றால் புகார் கொடுத்தபோது நான் வரவில்லை,அதன்பிறகு வந்தேன். எனக்கு முன்பே கார்த்தி புகார் கொடுத்துவிட்டார். அதன் பிறகு நானும், ராமநாதனும் கையெழுத்து போட்டுக்கொடுத்தோம். நான்கையெழுத்துபோட்ட பேப்பரில் என்ன எழுதியிருந்தது என்றால் 3 வது எதிரி முருகானந்தம் எங்கள் முன்னிலையில்மாவட்டகுற்றப்பிரிவு அலுவலகத்தில் ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார்.அதில் நாங்கள் கையெழுத்து போட்டோம்.

(2) ஒப்புதல் வாக்குமூலத்தில்என்னஎழுதியிருந்தது என்றால் முருகானந்தமும்,செந்தில் நாதனும் ரூ.7,70,000/- த்தை வாங்கியது ஒப்புக்கொண்டது எழுதியிருந்தது. எத்தனை மணி வரை காவல் நிலையத்தில் இருந்தேன் என்றால் சுமார் 3 மணிநேரம் வரை இருந்தேன். எத்தனை மணிவரை இருந்தேன் என்பது ஞாபகம் இல்லை. 2016 வருடம் நடந்தது என்பதால் ஞாபகம் இல்லை. 3 வது எதிரி முருகானந்தத்தை காவல் நிலையத்தில் வைத்துக்கொண்டார்களா என்றால் சரிதான். அங்கு அவரை நீதிமன்ற காவலுக்கு அனுப்பினார்கள் என்றால்சரிதான். அவரை நீதிமன்ற காவலுக்கு அனுப்பிய பின்னர்தான் வீட்டிற்கு நான் போனேன் என்றால் சரிதான்.

(3) காவல் நிலையத்திற்கு வந்து நானும், ராமநானும் கையெழுத்து போட்டது 2016 ம் வருடம் தேதி ஞாபகம் இல்லை. 01.03.2016 ம் தேதியா என்றால் தேதி ஞாபகம் இல்லை. அதன் பிறகு போலிசார் என்னை விசாரிக்கவில்லை என்றால் சரிதான். என்னை போல் 3 வது எதிரி முருகானந்தமும் எதிரி செந்தில் நாதனால்

பாதிக்கப்பட்ட நபர் என்றால் இருவரும்தான் பணம் வாங்க வந்தார்கள். எதிரி முருகானந்ததின் மீது புகார் கொடுத்தால்தான் செந்தில்நாதனிடம் பணம் வாங்க முடியும் என்பதால் 3 வது எதிரி மீது பொய் புகார் கொடுத்துள்ளோம் என்றால் சரியல்ல.இருவரும்தான் பணம் வாங்க வந்தார்கள்.

**மறுவிசாரணை இல்லை.**